வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேபர் கம்பனியினதும் (கம்பனி) அதன் துணைக் கம்கனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதன மாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 28 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேபர் கம்பனி (விசேட ஏற்பாடு) சட்டத்தின் 16 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களைசிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்)இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானவையுமாக இருக்கின்றன என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களினது தாக்கத்தினைத் தவிர,வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேட் நியூஸ்பேபர் கம்பனியினதும் (கம்பனி) அதன் துணைக் கம்கனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமானதோற்றத்தினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

கம்பனியின் முழுமையான உரித்துடைய துணைக் கம்பனிகளான வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் புறொபெடி டிவலொப்மென்ட் (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனி ஆகியவற்றின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனிக்கு முனைப்பழியற்ற அபிப்ராயம் வழங்கப்பட்டிருந்ததுடன்மற்றைய இரு துணைக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீதான பின்வரும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு முனைப்பழி அபிப்பிராயம் என்னால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**(அ) வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனி**

(i) மீளாய்வாண்டின்போது தாய்க்கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த கணனியின் பெறுமதி ரூபா 71,800 தொடர்பில் எவ்வித காசு வெளிப்பாய்ச்சலும் ஏற்பட்டிராத போதிலும் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சலாக இனங்காணப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின்போது எவ்வித விற்பனை வருமானமும் உழைத்திராத போதிலும், வாடகை கட்டணங்கள் மற்றும் சில்லறைச் செலவுகளின் திரண்ட தொகை ரூபா 22,360 விற்பனைக்கிரயமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார கடன்பட்டோரின் தொகை ரூபா 15,229,562 தொடர்பில் எவ்வித வசூலிப்பு நடவடிக்கையும் எடுக்கப்படாமல்அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒரு முழு ஏற்பாடு மேற்க்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் புரொபெடி டிவலொப்மென்ட் (தனியார்) கம்பனி**

---

(i) மீளாய்வாண்டில் தாய்க் கம்பனியுடனான நடைமுறைக் கணக்கில் பதியப்பட்டிருந்த வருமான வரிச் செலவு மற்றும் வட்டி வருமானம் முறையே ரூபா 117,600 மற்றும் ரூபா 296,877 தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு காசுப்பாய்ச்சலாகவும் முதலீட்டு காசுப்பாய்ச்சலாகவும் இனங்கானப்பட்டிருந்தன. எனினும், மீளாய்வாண்டு காலத்தில் இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எவ்வித காசுப்பாய்ச்சல்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) கொடுக்கல் வாங்கல்களின் திரண்டதொகை ரூபா 3,796,876 மற்றும் ரூபா 117,600 ஐ கம்பனி தனித்தனி கணக்குகளில் பதிவிடுவதற்குப் பதிலாக, தாய்க் கம்பனியுடனான நடைமுறைக் கணக்கில் முறையே வரவு மற்றும் செலவுகளாக பதிவிட்டிருந்தது.

**2.2.2 கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்)இணக்கப்பாடு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 215,223,000 தொகையான இறுதி இருப்பு நியமத்தின் பிரிவு 13.4 இற்கேற்ப கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதி என்பவற்றின் குறைவான பெறுமதிக்கு கணிக்கப்படாமல் கிரயப் பெறுமதியில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 1,167,000,000 கிரயமான ஆதனம் பொறி, உபகரணங்கள் அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுவதுடன் அவை அவ்வாறே கணக்கீடும் செய்யப்பட்டிருந்தன.

(இ) கம்பனிக்கு எதிராகவிருந்த தோல்வியுற்ற சட்ட வழக்குகளுக்கான ஏற்பாடானது அக்கடப்பாடுகளை நியாயமாக கொடுத்து தீர்ப்பதற்குரிய சிறந்த மதிப்பீட்டினை அளவீடு செய்யாது நிலுவையிலுள்ள எல்லா வழக்குகளின் கோரிக்கை தொகையின் ஒரு சதவீதத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கம்பனிக்கு எதிரான 37 சட்ட வழக்குகள் தொடர்பில் அக்கடப்பாடகளின் தன்மை பற்றிய சுருக்க குறிப்பு, ஏதேனும் நேரிடக்கூடிய கொடுப்பனவுகள் பற்றி எதிர்பார்க்கப்பட்ட தொகை மற்றும் காலம்,அவ்வெளிப்பாய்ச்சல்களின் காலம் அல்லது தொகை பற்றிய நிச்சயமற்ற தன்மைகளின் குறிப்புக்கள் மற்றும் ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட மீளளிப்புக்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகையான வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களின் கீழுள்ள கடப்பாடுகள் ரூபா 285,998,000 நியமங்களில் கோரப்பட்டதன்படி இற்றைப்பெறுமதியில் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் ஓய்வூதிய கடப்பாடுகள் தொடர்பான பணிக்கொடை நம்பிக்கை நிதியில் இடம்பெற்ற திட்டச் சொத்துக்கள்ரூபா 283,258,,000 மற்றும் திட்டப் பொறுப்புக்கள்

ரூபா 272,130,000 ஆன தொகைகள் நிதிக்கூற்றுக்களிற்கு முன்கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிக்கொடை நம்பிக்கை நிதியத்தின் முன்கொண்டுசெல் தொகை ரூபா 272,130,000 மற்றும் இந்நிதியத்தின் முதலீட்டிலிருந்து பெறவேண்டிய வட்டித்தொகை ரூபா 25,711,000 என்பன ஒத்திவைப்பு வரி (Differed tax) கணிப்பீட்டிற்கு கருத்திற் கொண்டிருக்கவில்லை. இதனால் ஒத்திவைப்பு வரி சொத்துக் கணக்கு ரூபா 68,997,760 இனால் மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் பல்வேறு கட்சியினருக்கு கட்டனமின்றி வழங்கப்பட்ட பத்திரிகைகளின் கிரயம் ரூபா 80,000,000 நன்கொடையாக கணக்கிடுவததற்குப் பதிலாக விற்பனைக்கிரயமாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2017 நவம்பர் 30 தொடக்கம் 2017 திசெம்பர் 28 வரையான காலப்பகுதியில் ரூபா 49,967,452 பெறுமதியான காசோலைகளை கம்பனி பெற்று வைப்பு செய்திருந்த போதிலும், இத்தொகை காசுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இத்தொகை வங்கிக்கணக்கிணக்கம் செய்வதற்கு முன்னுள்ள காசு மீதியில் சீராக்கம் செய்யப்படாமை காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மேலதிகப்பற்று மீதி இத்தொகையினால் மேலதிகமாக காட்டப்பட்டுள்ளது.

### 2.2.2.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்பட்டோர், வருமானம், பணிக்கொடை நம்பிக்கை நிதி பொறுப்பு மற்றும் பெறவேண்டிய சந்தாக்கள் போன்றவை தொடர்பிலான விபரப்பட்டியல்கள், பதிவேடுகள் மற்றும் பேரேடுகள் போன்றவற்றில் காட்டப்பட்டிருந்த தொகைகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நேரொத்த தொகைகளிற்கிடையே ரூபா 28,532,877 திரண்ட வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மறுக்கப்பட்ட காசோலை பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள முப்பத்தாறு மறுக்கப்பட்ட காசோலைகளின் திரண்ட தொகை ரூபா 1,725,631 மறுக்கப்பட்ட காசோலைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் வங்கி கணக்கிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 329,635 தொகையான 94 காசுக்கட்டளைகள் தீர்வை செய்யப்படாமல் ஒரு வருடம் முதல் 5 வருடங்கள் வரையான கால நிலுவைகளாக தொடர்ந்திருக்கின்றன.

(ஆ) கடன்பட்டோரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களுக்கமையரூபா 6,073,154 பெறுமதியான கடன்பட்டோர்கள் அவர்களின் மீதிகள் தொடர்பில் உடன்பட்டிருக்கவில்லை. மேலும்,ரூபா 610,529,468 பெறுமதியான உறுதிப்படுத்தல்கள் 2018 மே 24 வரை குறித்த கடன் பட்டோர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.அதேவேளை ரூபா 103,707,303 தொகையான வியாபார கடன்பட்டோர்கள் ஒரு வருடத்திற்கு மேலதிகமாக நிலுவைகளாக தொடர்ந்து காணப்படுவதுடன் அத்தொகையில் ரூபா 31,932,961 அல்லது 31 சதவீதம் அறவிடப்பட முடியாதவைகளாகக் கருதி சட்டப்பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்நது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 626,551,673 மொத்த கடன்பட்டோர் மீதிகளின் சரியான தன்மை மற்றும் அறவிடும் தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) கம்பனியின் சந்தாக்களை தொடர்ந்து செலுத்தியிராத வாடிக்கையாளர்களுக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடிரூபா 9,962,657 பெறுமதியான பத்திரிகைகளை கம்பனி வழங்கியிருந்தது. இத்தொகையில் ரூபா 5,289,168 தொகை 2011 இலிருந்த 2016 வரைநிலுவையாயிருந்ததுடன் இத்தொகையினை மீட்பதற்கு எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வில் இணக்கமின்மைக்கான பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகார சட்டத்தின் 114(1)ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு | 2017 ஏப்ரல் தொடக்கம் 2018 மார்ச் வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர்களுக்கான உபகார கொடுப்பனவு தொடர்பில் ரூபா 4,845,445 ஆன உழைக்கும் போதே செலுத்தும் வரியினை உரிய ஊழியர்களிடமிருந்து கழிப்பனவு செய்யாது கம்பனி செலுத்தியிருந்நது. |
| (ஆ) 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்கம் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவு | இச்சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டதன்படி கம்பனி தனது ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்திற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் சம்மதத்தையும் சபையின் அனுமதியையும் பெற்றிருக்கவில்லை |
| (இ) 2015 யூன் 17 ஆம் திகதிய பீஈடி3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பனி அரச உடமை முயற்சி ஒன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிதி யமைச்சினால் அல்லது பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விதிக் கப்படும் எவ்வித நெறிப்படுத் தல்களையும் இற்றைவரை கம்பனி பின் பற்றியிருக்கவில்லை. இது தொடர்பாக நிதிப் பணிப்பாளர் 2017 யூன் 29 ஆம் திகதிய அவரது கடிதத்தில் பீஈடி சுற்று நிருபங்களில் இருந்து விலக்குவதற்கான விடுவிப்பு ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவம் நிதி யமைச்சுடன் கலந்துரையாடியிருந்தது என அறிவித்திருந்தார். எனினும், அவ்வாறான அனுமதி இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய பீஈடி3/2017 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஊழியர் ஒருவரிற்கு 2017 ஆம் ஆண்டிற்கானஉபகாரக் கொடுப்பனவாக ரூபா 13,500 மட்டுமே கம்பனி வழங்க முடியும். எனினும் மீளாய்வாண்டிற்கான உபகார கொடுப்பனவாக அடிப்படை சம்பளத்தின் 4½ மாதங்கள் என்ற அடிப்படையில் கம்பனி செலுத்தியிருந்தது. மீளாய்வாண்டிற்கான உபகார கொடுப்பனவாக ரூபா 164,496,986 செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் குழுமத்தின் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனி மற்றும் குழுமத்தின் தொழிற்பாடுகள், நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் முறையே ரூபா 40,631,000 மற்றும் 29,008,000 தொகைகளுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 243,660,000 மற்றும் ரூபா 270,397,000 தொகைகளை வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக விளைவித்திருந்தமை, நிதி விளைவுகளில் முறையே ரூபா 203,029,000 மற்றும் ரூபா 241,389,000 தொகைகளினால் முன்னேற்றமடைந்திருப்பதனை சுட்டிக்காட்டுகின்றது. 2016 இல் சுயவிருப்பு ஓய்வு திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு அத்திட்டத்தின் கீழ் கம்பனியினால் ரூபா 163,513,000 தொகை ஊழியர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும்,மீளாய்வாண்டில் இவ்வாறான செலவுகள் ஏதும் நிகழ்ந்திருக்கவில்லை. இது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

கடந்த நான்கு வருடங்களிற்கான மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில், கம்பனியின் பெறுமதி சேர்மானங்கள் 2013 இலிருந்து 2017 வரை ஏற்ற இறக்கங்களாக காணப்பட்டன. எனினும், 2016 மற்றும் 2017 ஆண்டுகளிற்கான ஊழியர் சம்பளஙகள், வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன சாட்டுதல் செய்யப்பட்டதன் பின்னரான (பங்குலாபம் மற்றும் முகப்பெறுமதிச் சீராக்கத்தின் முன்), கம்பனியின் பெறுமதி சேர்மானமானது முறையே ரூபா 2,153,741 மற்றும் ரூபா 2,025,767 ஆக காணப்பட்டது. இது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 6 சதவீதத்திலான ஒரு வீழ்ச்சியினையும் காட்டுகின்றது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | 2016 |
|---|---|---|
| | **சதவீதம்** | **சதவீதம்** |
| மொத்த இலாப எல்லை | 55.32 | 53.69 |
| இலாப அளவு (விற்பனைக் கிரயத்தின் மீது மொத்த இலாபம்) | 123.81 | 115.92 |
| புரள்வு மீதான நிர்வாகக் கிரயம் | 38.10 | 43.85 |
| புரள்வு மீதான விற்பனை விநியோகக் கிரயம் | 10.83 | 10.86 |
| புரள்வு மீதான நிதிக் கிரயம் | 2.29 | 1.64 |
| திரவத்தன்மை விகிதம் | 2.50 | 2.12 |
| அமிலப் பரிசோதனை விகிதம் | 2.09 | 1.60 |

கம்பனியின் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப எல்லை மற்றும் இலாப அளவு விகிதங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 1.63 மற்றும் 7.89 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**
----------------------------------

**4.1 செயலாற்றல்**
--------------------

**4.1.1 திட்டமிடல்**
-----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017-2019 காலப்பகுதிக்கான ஒரு கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதற்கான செயற்பாடுகள் 2016 செப்தெம்பரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 பெப்ரவரி 23 இலே குறித்த கம்பனியுடன் இது தொடர்பான ஒப்பந்தத்தில் நுழைந்திருந்தன. எனினும், 2017 இன் கடைசிப்பகுதியில் குறித்த கம்பனியினால் 2018-2020 காலப்பகுதியை மாத்திரம் உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனவே,மீளாய்வாண்டு காலத்தில் வியாபாரச் சூழலிலுள்ள பலம் மற்றும் பலவீனங்கள் அவ்வாறே வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக கம்பனியினால் முறையாக மதிப்பாய்வுச் செய்யப்பட்டிருக்கவில்லை

(ஆ) 2017 ஒக்டோபர் 27 இல் கம்பனியின் பொது முகாமையாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் காணப்பட்ட அதே செயல் எல்லைகள் 2017 இல் அமுல்படுத்துவதற்காக நீடிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் காட்டப்பட்டிருந்த இலக்குகள் 2017 ஆம் ஆண்டிற்கு பொருத்தமான வகையில் மதிப்பீடு செய்து இற்றைப்படுத்தப்பட்டிருக்காததுடன் அத்திட்டத்திற்கான பணிப்பாளர் சபையின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை.ஆகையினால்,முகாமையின் தனிப்பொறுப்பாக இருக்கின்ற கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரிப்பதனூடாக வியாபார குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான பொருத்தமான தந்திரோபாயங்களை அடையாளம் காணும் செயற்பாடு மீளாய்வாண்டில் முழுமை பெற்றிருக்கவில்லை.

**4.1.2 செயலாற்றலும் மீளாய்வும்**
------------------------------------------

1973 இன் 28 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேட் நியூஸ்பேபர் கம்பனிச் (சிறப்பு ஏற்பாடுகள்)சட்டத்தின் 2 ஆம் 17 ஆம் பிரிவுகளின் படி,1973 ஆகஸ்ட் 4 ஆம் திகதிய 71/1ஆம் இலக்க அதிவிசேட இலங்கை குடியரசு வர்த்தமான பத்திரிகையில் வெளியிடப்பட்டவாறு கம்பனியின் குறிக்கோள்களாக (i) ஏதேனும் புதினப்பத்திரிகையை

அல்லது வேறு பிரசுரங்களை தாபித்தல், பொறுப்பேற்றுக் கொள்ளல், அச்சிடுதல், பிரசுரித்தல், புலக்கத்தில் விடுதல் மற்றும் அச்சிடுவோர், எழுது உபகரண விநியோகத்தர்கள், இயந்திர கோடு கீறுனர், எண்முறை அச்சிடுவோர், சிலை வரைவாளர், அச்சிவார்ப்போர் போன்ற எல்லா தொழில்களையும் அல்லது அவற்றில் எவற்றையாயினும் கொண்டு நடாத்துதல். (ii) செதுக்கல்கள், அச்சீடுகள்,படங்கள் வரைதல்கள் மற்றும் விளம்பர முகவர்கள்,விளம்பர ஒப்பந்ததாரர்கள், விளம்பர வடிவமைப்பாளர்கள் போன்ற தொழில்களில் உற்பத்தியாளர்களாக,விநியோகத்தர்களாக, விற்பனைதாரர்களாக தொழிலை கொண்டு நடாத்துதல்.(iii) படங்கள், கேளிக்கைகள்,இசை மற்றும் ஒலி ஆகியவற்றை பரிமாற்றம் செய்தல் அல்லது மீள் உருவாக்குதல் தொடர்பான படச்சுருள்கள், வேறு சாதனங்கள்,இயந்திரங்கள் என்பவற்றை உற்பத்தி செய்பவராக தொழிலை கொண்டு நடாத்துதல் (iv)சுற்றுலா முகவர்களாக தொழிலை கொண்டு நடாத்துதல் என்பன காணப்பட்டது. மேற்படி குறிக்கோள்களை செயற்படுத்தும்வகையில் மீளாய்வாண்டில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி 06 வகையான செய்தித்தாள்களையும் 12 வகையான பருவகால சஞ்சிகைகளையும் மீளாய்வாண்டில் பிரசுரித்திருந்த அதேவேளை முன்னைய ஆண்டில் 06 வகையான செய்தித்தாள்களையும் 09 வகையான பருவகால சஞ்சிகைகளையும் பிரசுரித்திருந்தது.மேலும் மீளாய்வாண்டின் போது வாசகர்களை கவரும் விதமாக 'தினமின'மற்றும்'சிலுமின'செய்தித்தாள்களுடன் வேறு மூன்றுபருவகால சஞ்சிகைகள் இணைப்பிரதிகளாக தொடர்ந்தும்வழங்கப்பட்டிருந்தன. எனினும், வெளியிடப்பட்ட 06 செய்தித்தாள்களிலிருந்து பெறப்பட்ட ஒட்டுமொத்த விற்பனை வருமானம் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 இல் ரூபா 47,582,000 இனால் குறைவடைந்திருந்ததுடன் 2016 உடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 05 செய்தித்தாள்களிலிருந்து பெறப்பட்ட விற்பனை வருமானங்களின் ஒட்டுமொத்த வீழ்ச்சி ரூபா 22,596,000 ஆக காணப்பட்டது.

(ஆ) ''தருணி'',''சரசவிய'',''புதுசரண'', போன்ற மூன்று சஞ்சிகைகளது விற்பனை வருமானங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017 இல் முறையே ரூபா 7,489,000 ரூபா 276,000 மற்றும் ரூபா 309,000 இனால் வீழ்ச்சியடைந்நிருந்நது.

(இ) மீளாய்வாண்டில் விற்பனைச் செய்யப்பட்ட 04 செய்தித்தாள்கள் மற்றும் 06 பருவகால சஞ்சிகைளின் பிரதிகளின் எண்ணிக்கை 1,117,279 அல்லது 6.41 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் 2017 இல் 05 செய்தித்தாள்கள் மற்றும் 06 பருவகால சஞ்சிகைகளின் அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கைகளும் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1,336,959 பிரதிகளினால் அல்லது 6.18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன.

(ஈ) வர்த்தக அச்சிடல்கள்,விசேட வெளியீடுகள் மற்றும் எண்ம (digital) அச்சிடல்களிலிருந்து பெற்ற வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 இல் முறையே ரூபா 6,454,000, ரூபா 1,354,000 மற்றும் ரூபா 1,583,000 இனால் வீழ்ச்சி அடைந்திருந்தது.

(உ) அதிக விளம்பரங்களை கவரும் வகையில் விளம்பர/விற்பனை முகாமையாளர்களுக்கு ஒரு ஊக்கப்படுத்தல் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்த போதிலும்,முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒட்டுமொத்த விளம்பர வருமானம் ரூபா 45.56 மில்லியன்களினால் வீழ்ச்சி அடைந்திருந்தது.

### 4.2 கம்பனிக்கு எதிராக தொடரப்பட்டிருந்த சட்ட வழக்குகள்

1981 ஒக்டோபர் 14 இன் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் விசேட வர்த்தமானி இலக்கம் 162/5 இல் பத்திரிகையாளர்களுக்கான விழுமியநெறிக் கோவை பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும்,வெளித்தரப்பினரால் கம்பனிக்கெதிராக 05 அவதூறு வழக்குகள் தொடரப்படடிருந்ததுடன் வாதிக்கு ரூபா 519 மில்லியன்கள் செலுத்துவதற்கு நீதிமன்றினால் நெறிப்படுத்தப்பட்டிருந்தது.பின்னர்,கம்பனி இத்தீர்ப்புகளுக்கு எதிராக

மேன்முறையீடு செய்திருந்தது.மேலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடி வேறு 07 அவதூறு வழக்குகள் சட்ட அபிப்பிராயத்தின் பொருட்டு நிலுவையில் காணப்படுகின்றன.

## 4.3 முகாமைத்துவநடவடிக்கைகள்

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டு காலத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனி (முன்னர் வரையறுக்கப்பட்ட பிஸ்னஸ் லங்கா ஏஎன் (தனியார்) கம்பனி என அறியப்பட்ட), 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடி ரூபா 25,868,875 தொகையான ஒரு திரண்ட நட்டத்திற்கு உள்ளாகி இருந்தது. மேலும், ஒரு முறையான கடன் வசூலிப்புக் கொள்கையின்மையால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடி வியாபார ஐயக்கடன் தொகைரூபா 15,229,562 குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்தது.அதேவேளை,இத்துணைக்கம்பனி அதன் செயற்பாட்டுச் செலவுகளிற்கான நிதியிடலிற்கு முழுமையாக கம்பியின் மீது தங்கியிருந்ததன் விளைவாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடி கம்பனிக்கு பெறவேண்டிய தொகை ரூபா 22,704,067 ஆக காணப்பட்டது. எனினும், இத்திகதியில் பெறவேண்டிய இத்தொகைக்கு எதிராக ஒரு முழு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும்,தொடர்ச்சியான வணிக நட்டம் எதிர்க்கணிய தொழிற்படு மூலதனம் மற்றும் எதிர்க்கணிய திரவத்தன்மை எல்லை என்பன காரணமாக 2018 பெப்ரவரி 15 இல்இத்துணைக்கம்பனியின் பணிப்பாளர் சபை கம்பனியை கலைப்பதற்கான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது.

(ஆ) வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி (முன்னர் வரையறுக்கப்பட்ட இன்போ மீடியா (தனியார்) கம்பனி என அறியப்பட்ட) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடி ரூபா 13,122,685 தொகையான ஒரு திரண்ட நட்டத்திற்கு உள்ளாகி இருந்தது.இத்துணைக்கம்பனி அதன் செயற்பாட்டுச் செலவுகளிற்கானநிதியிடலிற்கு முழுமையாக கம்பியின் மீது தங்கியிருந்ததன் விளைவாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடி கம்பனிக்கு பெறவேண்டிய தொகை ரூபா 10,695,637 ஆக காணப்பட்டது. எனினும், இத்திகதியில் பெறவேண்டிய இத்தொகைக்கு எதிராக ஒரு முழு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தொடர்ச்சியான வணிக நட்டம் எதிர்க்கணிய தொழிற்படு மூலதனம் மற்றும் எதிர்க்கணிய திரவத்தன்மை எல்லை என்பன காரணமாக இத்துணைக்கம்பனியின் பணிப்பாளர் சபை கம்பனியை கலைப்பதற்கான ஒரு தீர்மானத்தை 2018 பெப்ரவரி 15 இல் மேற்கொண்டிருந்தது.

(இ) ஆதன மேம்படுத்தல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக 1985 இல் தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் புரொபெடி டிவலொப்மன்ட் (தனியார்) கம்பனி, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து எவ்வித காசுப் பாய்ச்சலையும் உருவாக்கி இருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,336,645 பெறுமதியான 161 மதிப்பழந்த காசோலைகள் இருந்தன. இவற்றில் ரூபா 1,693,116 பெறுமதியான 55 காசோலைகள் மற்றும் ரூபா 708,289 பெறுமதியான 28 காசோலைகள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் முறையே 5 வருடங்கள் மற்றும் 3 வருடங்களிற்கு மேற்பட்டு தொடர்ந்து நிலுவையாகக காணப்படுகின்றன.

(உ) வரையறுக்கப்பட்ட லங்கா புவத் கம்பனியிடம் இருந்து (இலங்கை தேசிய செய்தி முகவர்) 2008 திசெம்பரில் 1200 எண்ணிக்கையான பங்குகள் கொள்வனவிற்காக இடைக்கால கொடுப்பனவாக ரூபா 1.2 மில்லியன் தொகையினை கம்பனி செலுத்தியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இம் முதலீட்டில் இருந்து எவ்வித திரும்பல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டில்

லங்கா புவத் கம்பனி தொர்பில் மூன்று ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கூலிகளாக திரண்ட தொகை ரூபா 2,151,146 வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) 720 நாட்களுக்கு மேலாக நிலுவையாக இருந்த ரூபா 4,552,559 பெறுமதியான நான்கு கடன்பட்டோர்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான துணை ஆவணங்கள் தொலைந்திருப்பதன் காரணமாக அவர்களுக்கெதிராக நடவடிக்கைகள் கம்பனியினால் எடுப்பதற்கு முடியாதுள்ளது.

(எ) 2008 பெப்ரவரி 06 இன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 05/2008 இனால் வேண்டப்பட்டதன்படி கம்பனி பிரசைகள்/சேவை பெறுநர் பட்டயத்தினை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செய்தித்தாள் முகவர்களின் நுழைவு ஒப்பந்தத்தின் போது கம்பனியினால் பிடிக்கப்படும் வைப்புக்களுக்கு 10 சதவீத வருடாந்த வட்டியை கம்பனி செலுத்தி இருந்தது. இவ்வைப்பு எல்லைகள், இவ்வட்டி கொடுப்பதற்கான தீர்மானம், மற்றும் வட்டிவீதம் என்பவற்றிற்காக இயக்குனர் சபையிடம் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் 460 செய்தித்தாள் முகவர்களுக்காக ரூபா 3,137,318 ஆன ஒரு தொகை வட்டியாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், சேகரிக்கப்பட்ட இப்பணத்தொகைக்கெதிரான எவ்வித முதலீட்டு திட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, இச்செய்தித்தாள் முகவர்களினால் கம்பனிக்குச் செலுத்த வேண்டியதொகைகளுக்காக 50 நாட்கள் கடன் தவணை காலம் அனுமதிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 மற்றும் 2016 தொடக்கம் முறையே கொழும்பிலுருந்து கதிர்காமம் மற்றும் கொழும்பிலுருந்து யாழ்ப்பாணம் நோக்கி இரண்டு பஸ் சேவைகளை கம்பனி நடத்தியது. இருவழி (per trip)பஸ்வாடகையாக முறையே ரூபா 31,000 மற்றும் 60,000 அடிப்படையில் பஸ்களை வழங்குவதற்கு இரண்டு தனியார் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், இந்நோக்கம் தொடர்பாக இந்நிறுவனங்களுடன் எவ்வித உடன்படிக்கைகளும் இன்றி இந்நிறுவனங்களுக்கு முறையே ரூபா 11,140,023 மற்றும் 22,500,000 ஆன திரண்ட தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதேவேளை, மீளாய்வாண்டில் கம்பனி இவ் பஸ் சேவைகளிலிருந்து முறையே ரூபா 4,928,589 மற்றும் 6,899,920 தொகையான கடுமையான நட்டத்திற்குள்ளாகியிருந்தது.

### 4.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டச் சொத்துக்கள்

வீடமைப்பு திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஹோகந்தரவிலுள்ள 8 ஏக்கர் விஸ்தீரணமுடைய காணி 1985 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்படுகிறது.

### 4.6 வேறு அரச நிறுவனங்களுக்கு மனித வளங்களை விடுவித்தல்

2003 இன் யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு மாறாக மீளாய்வாண்டில் வேறு அரசாங்க நிறுவன சேவைகளுக்காக நான்கு பத்திரிக்கையாளர்கள்,இணை பதிப்பாசிரியர்,முகாமைத்துவ பதிப்பாசிரியர்,உதவி பொது முகாமையாளர்-தொழில்நுட்பம்,படப்பிடிப்பாளர்,செவ்வை பார்ப்பவர்,உதவி முகாமையாளர் மற்றும் பொது உதவியாளர் ஆகியோர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.அவர்கள் சார்பில் சம்பளம்,கூலி மற்றும் படிகளாக ரூபா 9,751,458 இணை கம்பனி செலவிட்டிருந்தது.மீளாய்வாண்டில் நான்கு பத்திரிக்கையாளர்கள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் பதின்மூன்று பத்திரிக்கையாளர்கள் புதிதாக ஆட்சேர்க்கபட்டிருந்தனர்.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறந்த ஆளணி நிர்வாகத்திற்காக கம்பனியால் திறன் கொள்ளல், பதவியுயர்வு, லீவு கொள்கை போன்றவாறு ஏழு கொள்கைகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஓகஸ்ட் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் முகாமைத்துவ கொள்கைக்கு மாத்திரம் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு காலத்தில் மனித வளங்கள்,உள்ளக கணக்காய்வு, பதிப்புமற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் நான்கு மதியுரைஞர்களின் சேவைகளை ரூபா 3,117,500 ஐ செலுத்தி பெற்றிருந்த போதிலும்,ஒப்பந்த கால நிறைவில் அவர்களினால் வழங்கப்பட்ட சேவை தொடர்பிலான அறிக்கை கம்பனியிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.அதேவேளை, சபையின் அனுமதியின்றி இரண்டு மதியுரைஞர்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ஊழியர்களின் உற்பத்தி விளைதிறனை அதிகரிப்பதற்கு பொருத்தமான திறமையுடைய உண்மையான பதவியணியை கம்பனி கொண்டிருக்க வேண்டிய போதிலும், இப்பதவியணியின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் 2012 ஜுலை 01 இன் பின்னர்கம்பனியால் கிரமமாக மீளமைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. கம்பனியால் தாமாகவே தயாரித்துக்கொண்ட அங்கீகரிப்பட்ட பதிவியணியின்படிபதிப்பாசிரியர் திணைக்களம் மற்றும் பொது நிர்வாக திணைக்களம் என்பவற்றில் 522 ஊழியர்கள் மேலதிகமாகவும் அவர்களில் 268 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் காணப்பட்டனர்.

(ஈ) ஒரு மாதிரி கணக்காய்வுச் சோதனையில், இரண்டு பிரதி பொது முகாமையாளர்கள், மூன்று உதவி முகாமையாளர்கள்,மூன்று முகாமையாளர்களமற்றும் ஒரு சிரேஷ்ட உதவிக் கணக்காளர் போன்றோர்கள் கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் தேவைப்படுத்தப்பட்டதன்படியான குறைந்தபட்ச தகுதிகளையேனும் கொண்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது.

## 5. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

2030 ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி இலக்குகள் நிகழ்ச்சி நிரல்களுக்கு இணங்க ஒவ்வொரு பகிரங்க நிறுவனமும் செயற்படல் வேண்டும்.இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகள் பற்றி கம்பனி விழிப்பணர்வு அடைந்திருக்காமை காரனமாகஇவ் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பான நடவடிக்கைகள், இலக்குகளை அடைந்து கொள்ளுதல் தொடர்பான மைல்கற்கள் மற்றும் இலக்குகளை அடைதல் தொடர்பில் மதிப்பாய்வு செய்வதற்கான குறிகாட்டிகள் என்பவற்றை இணங்காண்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகளை அமுல்லபடுத்துவதற்கான தயார்ப்படுத்தல்கள் கம்பனியின் செயற்பரப்பிற்கு அப்பால் காணப்படுகின்றது என கணக்காய்விற்கு கம்பனி அறிவித்திருந்த போதிலும்,இந்நிகழ்சி நிரலின் கீழுள்ள 17 இலக்குகளில் பால் சமத்துவத்தை அடைதல், பெண்கள் மற்றும் பிள்ளைகளை வலுவூட்டல், பூரண மற்றும் உற்பத்தித்திறன் வேலைவாய்ப்பு மற்றும் எல்லோருக்குமான தரமான வேலை, கட்டிட நெகிழ்வான உட்கட்டுமானம்,மேம்பாடு உள்ளடங்கியதும் நிலைத்திருக்ககூடியதுமான கைத்தொழில்மயமாக்கம் மற்றும் புதுமை புனைதல் போன்ற சில இலக்குகள் கம்பனிக்கு பொருத்தமானது

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கணக்காய்வுக் குழு

திறைசேரியின் பிரதிநிதியொருவரின் அல்லது நிதி முகாமைத்துவத் திறன்களை கொண்ட ஆளொருவரின் தலைமையில் ஆகக் குறைந்தது நிறைவேற்றுத் தரமற்ற 03 சபை உறுப்பினர்களை கணக்காய்வு குழு உள்ளடகியிக்க வேண்டிய போதிலும்,நிறைவேற்றுத் தரம் கொண்ட ஒரு பணிப்பாளர் கூட்டங்களை தலைமை தாங்கியிருந்ததுடன் அக்கூட்டங்களில் திறைசேரியின் எப்பிரதிநிதிகளும் பங்குபற்றியிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான தொகைகளுக்கிடையே 20 சதவீதம் தொடக்கம் 112 சதவீதம் வரையான வீச்சில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கபட்டமை, பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுபாட்டுக் கருவியாக பயன்டுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

### 6.3 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு விடயங்கள்

முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பின்வரும் விடயங்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் புரொபடி டிவலப்மென்ட் (தனியார்)கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்)கம்பனி ஆகியவற்றில் முதலீடு செய்யபட்டிருந்த தொகைகள் முறையே ரூபா 7,500,000 மற்றும் ரூபா 2,500,000 இலிருந்து எவ்வித திரும்பல்களும் கிடைத்திருக்காமை.

(ஆ) பேரேட்டு மீதிக்கும் தொடர்புடைய கால பகுப்பாய்விற்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டமை.

(இ) மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் முகாமைத்துவம் | பேரேட்டு மீதிக்கும் தொடர்புடைய கால பகுப்பாய்விற்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றமை மற்றும்உறுதிப் படுத்தப்படாத கடன்பட்டோர் மீதிகளை மீளாய்வு செய்யாமை . |
| (ஆ) | வருமானம்முகாமைத்துவம் | செய்திப்பத்திரிகைகளின் விற்பனை வருமானம் குறைவடைந்திருந்தமை, செய்திப்பத்திரிகைகள் மற்றும் பருவகால சஞ்சிகைகளின் அச்சிடல் குறைவடைந்திருந்தமை. |

| | | |
|---|---|---|
| (இ) | மனிதவள முகாமைத்துவம் | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளிற்கான அங்கீகரிக்கபட்ட திட்டமொன்று இல்லாமை |
| (ஈ) | ஊழிய பின்னுரித்துக்கள் | பணிக்கொடை நம்பிக்கை நிதியில் இடம்பெற்ற திட்டச் சொத்துக்கள், மற்றும் திட்டப் பொறுப்புக்கள் பற்றி வெளிப் படுத்தப்படாமை. |